கணினிமயப்படுத்தப்பட்டசம்பளத்தயாரிப்புச்செயன்முறை	3	3நாள்	21,000.00		உள்நாட்டு	சம்பளத்தயாரிப்புத் தொடர்பானகணினிமயப்படுத்தப்பட்டபயிற்சியைப்பெற்றுக்

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்சித் திட்டத்தின் காலம்	மொத்த முதலீடு		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/ வெளிநாட்டு)	வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளிநாட்டு		
(முகாமைத்துவ சேவைஉத்தியோகத்தர்)						கொள்ளல்
பதிவேட்டுப்பரிசோதனை (உரித்துவிசாரணைஉத்தியோகத்தர்)	40	1 நாள்	8,555.00		உள்நாட்டு	பதிவேட்டுப்பரிசோதனைதொடர்பானஅறிவைப்பெற்றுக்கொள்ளல்
ஆற்றல்விருத்திவேலைத்திட்டம் (சாரதிகள்)	38	1 நாள்	77,780.00		உள்நாட்டு	வீதிப்போக்குவரத்துச்சட்டங்களைப்பின்பற்றுதல்தொடர்பானஅறிவைப்பெற்றுக்கொள்ளல்
மொத்தம்	800	09	2,550,122.00			

* தலாஇரண்டுநாட்கள்வீதம்பன்னிரண்டு (12) வேலைத்திட்டங்களின்அளவாகும்.

நிறுவனத்தின் செயல்திறன் குறித்த பயிற்சித் திட்டங்களின் பங்களிப்பு

இந்தத் திணைக்களத்தின் உதவி உரித்து புலனாய்வு அலுவலர்களுக்கு 2025 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பயிற்சித்திட்டங்களின் மூலம், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் படி, திணைக்கள நடைமுறைகளை முறையாகவும் துல்லியமாகவும் பராமரிப்பது பற்றிய அறிவைப் பெறுவதற்கான பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. தனியார் காணி உரித்துடைமை, உரித்து நிர்ணய செயன்முறை, சட்டப் பின்புலம் போன்ற விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்வதற்காக துல்லியமான விசாரணை அறிக்கைகளை வழங்குவதற்கு அவசியப்படுகின்ற தெள்ளிய அறிவினைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாகவும் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து நிர்ணயச் சட்டம் மற்றும்

அச்சட்டத்துக்கான திருத்தங்கள் பற்றிய புரிந்துகொள்ளலைப் பெற்றுக்கொள்வதற்கும் பயிற்சி நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப சட்டத்தின் ஏற்பாடுகள் பற்றிய பரந்துபட்ட அறிவை அலுவலர்களுக்கு வழங்குவதன் மூலம் காணி நிர்ணய செயற்பாடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், இத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் முகாமைத்துவ சேவை அதிகாரிகள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியின் மூலம், அதிகாரிகளின் துறைசார் அறிவையும் மனப்பாங்கு வளர்ச்சியையும் மேம்படுத்தி, அதன் ஊடாக நிறுவனத்தின் செயல்திறனை உயர்த்துவதே எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தியாயம் 07
இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
01	பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்தக முற்பண கணக்குகள்)	இணக்கமற்றது	வணிக மற்றும் உற்பத்திக் கணக்கு பராமரிக்கப்படுவதில்லை	
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	இணக்கமற்றது	களஞ்சிய முற்பணக் கணக்குகள் தயாரிக்கப்படவில்லை	
1.5	சிறப்பு முற்பணக் கணக்குகள்	இணக்கமற்றது	சிறப்பு முற்பணக் கணக்குகள் காணப்படவில்லை	
1.6	ஏனைய	-		
02	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி 445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப் பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறை சேரிக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
2.8	இருப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	-		
2.10	பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
03	நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (பி.நி.135)			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்துக்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.			
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல . 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
04	வருடாந்த திட்டத்தினை தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது	-		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டது.	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவுசெலவுத் திணைக்களத்திற்கு (NBD)	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	உரிய திகதியில் சமர்பித்தல்			
4.5	வருடாந்த காசுப்பாய்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
05	கணக்காய்வு வினாக்கள்			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
06	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி .பி .134 (2) டீ.எம்.ஏ./1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமற்றது	பிராந்திய அலுவலகங்களிலிருந்து பதில்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்கள்.	தொலைபேசி மூலமும் எழுத்து மூலமும் நினைவூட்டல்கள் அனுப்பி, நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பதில்களைப் பெறுவதற்காக தொடர்ந்து பின்தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தின் 40(4) துணைப்பிரிவின் அடிப்படையில் கணக்காய்வு முகாமைத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	நகல்களையும் (3)134 நிதி பிரமானக் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல் .			
07	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	டீ.எம்.ஏ /1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது		
08	ஆதன முகாமைத்துவம்			
8.1	சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பந்தி 7 இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி,சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரிகளை நிதி தணிக்கையாளர் நாயகம் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.01/2020 இன் படி, மீளாய்வுச் சபைகள் நடத்தப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.4	மீளாய்வு சபை மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகைகளும் குறைகளும் ஏனைய பரிந்துரைகளும் தொடர்பில் சுற்றறிக்கையில்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.			
8.5	நி.பி. 72 இன் படி கழிக்கப்பட்டு பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
09	வாகன முகாமைத்துவம்			
9.1	குழு வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கள் அகற்றப்படுதல் வேண்டும்	இணக்கமற்றது	அகற்றல் செயல்முறைக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
9.4	ஒவ்வொரு வாகன விபத்துக்கும் நி.பி. 103,104,109,110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல . 2016/30இன் பந்தி3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல் .	இணக்கமற்றது	இவ்வாண்டிற்கான எரிபொருள் உமிழ்வு (புகை) பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.	எரிபொருள் உமிழ்வு (Emission) பரிசோதனை யை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு ள்ளது.
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	வங்கி கணக்குகளின் முகாமை			
10.1	உரிய திகதிகளில் வங்கிகணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத்	இணக்கமற்றது	செயலற்றகணக்குகள்இல் லை	

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	தீர்த்தல்			
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்டுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்டுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமானது		
11	நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி.94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு			
12.1	எல்லைகளுக்குள் இணங்கப்படல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	செய்திருத்தல்			
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமற்றது		
13	பொது வைப்புக் கணக்கு			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	கட்டுநிதிக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்			
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	வருமான கணக்கு			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணக்கமற்றது	வருமானக்கணக்குகள்காணப்படவில்லை.	
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு	இணக்கமற்றது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	வைக்கப்பட வேண்டும்			
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்தல்	இணக்கமற்றது		
16	மனித வள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியார்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களது கடமைகளுக்கும் எழுதப்பட்ட பட்டியலைகள் வழங்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
16.3	20.09.2017 திகதியிடப்பட்ட 04/2017ஆம்இலக்களம்.எஸ்.டி. சுற்றறிக்கையின்படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	பொதுமக்களுக்கான தகவல் வழங்குதல்			

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்கள் முறையாகப் பதிவுசெய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன	இணக்கமானது		
17.2	இணையதளத்தின் மூலம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனம் பற்றிய தகவல்கள் பொது மக்களுக்க வழங்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய முறைமை வாயிலாக அரசாங்க அதிகாரிகளைப் பொதுமக்கள் வாழ்த்தவும் / அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் மேற்கொள்ளவும் வசதியளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 பிரிவின் படி ஆண்டுக்கு ஆண்டு அறிக்கைகளையும் ஈராண்டு	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	அறிக்கைகளையும் சமர்பித்தல் .			
18	பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்			
18.1	பொது நிர்வாக அமைச்சு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல .05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற் டுத்துதல் .	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐ பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது .	இணக்கமானது		
19	மனிதவள திட்டத்தினை தயாரித்தல்			

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல . 02/2018 இன் இணைப்பு 02ஆம் படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் .	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டு தோறும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமானது		
19.3	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டு தோறும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமற்றது	அரசு நிர்வாகச் சுற்றறிக்கை இல. 02/2018 (i) இன் படி, வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்களில் கையொப்பமிட வேண்டிய அவசியம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.	

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலையினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		

இணைப்பு 01

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்

நிர்ணய உத்தியோகத்தர் / ஆணையாளர் / ஆணையாளர் நாயகத்தின் பெயர் பட்டியல்

1903 – 1905	திரு.ஜே.ஜீ. ப்ரேஷர்
1906	எச்.ஓ. பொக்ஷ் (பதில்)
1907 – 1912	திரு.ஜே.ஜீ. ப்ரேஷர்
1913	எச்.ஓ. பொக்ஷ் (பதில்)
1914	திரு.ஜே.எம். டெவிஷ்
1915 -1917	எச்.ஓ. பொக்ஷ்
1918	திரு.ஜே.எம். டெவிஷ் (பதில்)
1919 – 1920	எச்.ஓ. பொக்ஷ்
1921	திரு. டப்லிவ்.ஈ. வெட்
1922 – 1923	திரு.எம்.எம். வெதர்பர்ன் (பதில்)
1924	திரு.எம்.டீ.ஆச்பல்ட் (பதில்)
1925	திரு.எப். பார்ட்லட்
1926 – 1927	திரு.எம்.டீ. ஆச்பல்ட் (பதில்)
1928	திரு.எம்.டீ.ஆச்பல்ட்
1929 – 1930	திரு. டப்லிவ்.டீ.ஸ்டேஸ்
1931 – 1936	திரு.எச்.ஈ,ஜேன்ஷ் (பதில்)
1937 – 1939	தி.ரு.எச்.ஈ. ஜேன்ஷ்
1940	திரு.சீ.எல. விக்ரமசிங்க
1941 – 1944	தி.ரு.எச்.ஈ. ஜேன்ஷ்
1945 – 1947	திரு. சீ.பீ.சீ. பெரேரா (பதில்)
1948 – 1950	திரு. சீ.பீ.சீ. பெரேரா
1951 – 1954	திரு.எம்.டப்லிவ். எப். அபேகோன் (பதில்)
1955 – 1958	திரு.எம்.டப்லிவ். எப். அபேகோன்

1959	தி.ரு.எஸ்.எல்.த. சில்வா (பதில்)
1960	திரு.ஆர்.டீ.ரத்னதுங்க (பதில்)
1961 – 1963	திரு.ஆர்.டீ.ரத்னதுங்க
1964 – 1974	தி.ரு.எஸ்.எல்.த. சில்வா
1975 – 1978	திரு.சீ.எஸ்.ரணசூரிய
1979 – 1980	திரு.ஜ.ஏ.எதிரிவீர
1981 – 1983	திரு.கே.பீ.விமலதர்ம
1984 – 1987	திரு.ஆர்.டப்லிவ். பியசேன
1988	திரு. ஏ.பொரலுகொடை (பதில்)
1989	திரு.டீ.ஜீ.பீ. செனவிரத்ன
1990 – 1993	திருமதி.ஆர்.பீ.சீ. உடுகம்பல
1994	திரு. எச். உடகந்தகே (பதில்)
1995 – 1997	திரு.ஆர்எம்.சீ.பீ.உடுகம்பல
1997 – 2001	திரு. உடகந்தகே
2002 – 2003	திரு.எஸ்.எச். விதானகே
2004 – 2005	திரு.கே.எல்.டீ.பீ. பொல்
2006 – 2008	திரு.பீ.ஏ. முதுகுமாரன
2009 – 2010	திரு.ஜீ.விஜித நந்தகுமார
2011	திரு.எல்.கே.பேமரத்ன
2012 - 2013	திரு.ஏ.எச்.எஸ். விஜேசிங்க
2013- 2015	திரு.காமினி இலங்கரத்ன
2015	திரு.விஜித நந்தகுமார்
2015 - 2018	திரு.கே.ஏ.கே.ரஞ்ஞித் தர்மபால
2019- 28.09.2022	திருமதி.பீ.எம்.எச். பிரியதர்ஷனீ
29.09.2022- தற்போது வரை	திருமதி.பீ.சீ.டீ. சிகேரா

அ.மு.அ.	- அரச முகாமைத்துவ அலுவலகர்
உ.வி.உ..	- உரித்து விசாரணை உத்தியோகத்தர்
ஆ.பு.உ.	- ஆவணப் புலனாய்வு உத்தியோகத்தர்
ஆ.கா.	- அவண காப்பாளர்
அ.உ.	- அபிவிருத்தி உதவியாளர்
த.தொ.தொ.உ.	- தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்
அ.உ.	- அலுவலக உதவியாளர்
த.தொ.தொ.உ.	- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

இணைப்பு இல: 02



ඇමුණුම III

Cumulative Commitment/ Liability Report for the Year - 2025

To
Department of Land Title Settlement (287)

From
Director General, ,
Department of State Accounts, ,

General Treasury, Colombo1. .

Printed by **yeni403**
New Table No **:SA-92**
Old Table No :--
Report Date 3/5/2026 10:17:58 AM

FINAL 2025 — NEW CIGAS REPORTS

Nature	Commit_No	Date	To_whom	Vote	Commitment	Commit_bal	L_Date	Liability_amt	Revised_Lia	Paid	Liability_Bal	Reported_By
Govt	C/2025/HR/02	31 Dec 2025	B.G.K.R.K. Bulanewa	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/03	31 Dec 2025	L.D.I.U. Kumara	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/04	31 Dec 2025	A.M.C.J. Adhikari	287-2-01-000-1003-000/11-P	13,691.66	0.00	20 Jan 2026	13,691.66	0.00	0.00	13,691.66	287
Govt	C/2025/HR/05	31 Dec 2025	W.R.N.M. Dayananda	287-2-01-000-1003-000/11-P	27,272.50	0.00	20 Jan 2026	27,272.50	0.00	0.00	27,272.50	287
Govt	C/2025/HR/06	31 Dec 2025	K.A.S.M. Koralearachchi	287-2-01-000-1003-000/11-P	27,272.50	0.00	20 Jan 2026	27,272.50	0.00	0.00	27,272.50	287
Govt	C/2025/HR/07	31 Dec 2025	H.M.B.C.M. Kumara	287-2-01-000-1003-000/11-P	27,272.50	0.00	20 Jan 2026	27,272.50	0.00	0.00	27,272.50	287
Govt	C/2025/HR/08	31 Dec 2025	U.G.T.D. Jayarathna	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/09	31 Dec 2025	S.O.A.D.N.S, Samarasekara	287-2-01-000-1003-000/11-P	17,810.00	0.00	20 Jan 2026	17,810.00	0.00	0.00	17,810.00	287
Govt	C/2025/HR/10	31 Dec 2025	K.H.S.U.Yasanayaka	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/11	31 Dec 2025	K.L.P.Subhshini	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/12	31 Dec 2025	D.M.T.B.Dasanayaka	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/13	31 Dec 2025	A.A.S. Manike	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/14	31 Dec 2025	H.P.S. Madurangi	287-2-01-000-1003-000/11-P	20,537.50	0.00	20 Jan 2026	20,537.50	0.00	0.00	20,537.50	287
Govt	C/2025/HR/15	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	1,349.18	0.00	20 Jan 2026	1,349.18	0.00	0.00	1,349.18	287

Govt	C/2025/HR/16	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	3,090.96	0.00	20 Jan 2026	3,090.96	0.00	0.00	3,090.96	287
Govt	C/2025/HR/17	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	2,698.34	0.00	20 Jan 2026	2,698.34	0.00	0.00	2,698.34	287
Govt	C/2025/HR/18	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	2,698.34	0.00	20 Jan 2026	2,698.34	0.00	0.00	2,698.34	287
Govt	C/2025/HR/19	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	1,914.09	0.00	20 Jan 2026	1,914.09	0.00	0.00	1,914.09	287
Govt	C/2025/HR/20	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	850.70	0.00	20 Jan 2026	850.70	0.00	0.00	850.70	287
Govt	C/2025/HR/21	31 Dec 2025	D.M.C.K.Disanayaka	287-2-01-000-1003-000/11-P	12,240.00	0.00	26 Jan 2026	12,240.00	0.00	0.00	12,240.00	287
Govt	C/2025/HR/22	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	1,328.15	0.00	26 Jan 2026	1,328.15	0.00	0.00	1,328.15	287
Govt	C/2025/HR/23	31 Dec 2025	W.H.A. Sampath Rangajeewa	287-2-01-000-1003-000/11-P	7,000.00	0.00	27 Jan 2026	7,000.00	0.00	0.00	7,000.00	287
Govt	C/2025/HR/24	31 Dec 2025	A.S.N. AMarasinghe	287-2-01-000-1003-000/11-P	68,458.30	0.00	27 Jan 2026	68,458.30	0.00	0.00	68,458.30	287
Govt	C/2025/HR/25	31 Dec 2025	P.A Ariyadasa and Son	287-2-01-000-1301-000/11-P	5,850.00	0.00	27 Jan 2026	5,850.00	0.00	0.00	5,850.00	287
Govt	C/2025/HR/26	31 Dec 2025	R.M. Janani Buddima	287-2-01-000-1003-000/11-P	14,000.00	0.00	29 Jan 2026	14,000.00	0.00	0.00	14,000.00	287
Govt	C/2025/HR/27	31 Dec 2025	H.M. Dilhani Madushika	287-2-01-000-1003-000/11-P	15,000.00	0.00	29 Jan 2026	15,000.00	0.00	0.00	15,000.00	287
Govt	C/2025/HR/28	31 Dec 2025	Shroff - Land Title Settlement Department	287-2-01-000-1101-000/11-P	6,600.00	0.00	27 Jan 2026	6,600.00	0.00	0.00	6,600.00	287
Govt	C/2025/HR/29	31 Dec 2025	Shroff - Land Title Settlement Department	287-2-01-000-1101-000/11-P	8,424.00	0.00	27 Jan 2026	8,424.00	0.00	0.00	8,424.00	287
Govt	C/2025/HR/30	31 Dec 2025	Shroff - Land Title Settlement Department	287-2-01-000-1101-000/11-P	24,180.00	0.00	27 Jan 2026	24,180.00	0.00	0.00	24,180.00	287
Govt	C/2025/HR/31	31 Dec 2025	J.S.Jayasekara	287-2-01-000-1003-000/11-P	15,000.00	0.00	29 Jan 2026	15,000.00	0.00	0.00	15,000.00	287
Govt	C/2025/HR/32	31 Dec 2025	D.P.S.R. Jayasiri	287-2-01-000-1003-000/11-P	14,000.00	0.00	29 Jan 2026	14,000.00	0.00	0.00	14,000.00	287
Govt	C/2025/HR/33	31 Dec 2025	H.M. Madushani Nisansala	287-2-01-000-1003-000/11-P	14,000.00	0.00	29 Jan 2026	14,000.00	0.00	0.00	14,000.00	287
Govt	C/2025/HR/34	31 Dec 2025	K.A.C. Subashini	287-2-01-000-1003-000/11-P	14,000.00	0.00	29 Jan 2026	14,000.00	0.00	0.00	14,000.00	287
Govt	C/2025/HR/35	31 Dec 2025	A.M.J.W.K. Atthanayaka@3	287-2-01-000-1101-000/11-P	15,750.00	0.00	02 Feb 2026	15,750.00	0.00	0.00	15,750.00	287
Govt	C/2025/HR/36	31 Dec 2025	K.P.P.Madushan@6	287-2-01-000-1101-000/11-P	17,050.00	0.00	02 Feb 2026	17,050.00	0.00	0.00	17,050.00	287
Govt	C/2025/HR01	31 Dec 2025	R.R. Karannagoda	287-2-01-000-1301-000/11-P	1,840.00	0.00	12 Jan 2026	1,840.00	0.00	0.00	1,840.00	287
Govt	C/2025/HR100	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	14,721.11	0.00	31 Dec 2025	14,721.11	0.00	0.00	14,721.11	287

Govt	C/2025/HR101	31 Dec 2025	Sri Lanka Telecom PLC	287-2-01-000-1402-000/11-P	19,740.49	0.00	31 Dec 2025	19,740.49	0.00	0.00	19,740.49	287

This is a computer-generated document. No signature is required.

Report Generated by the new CIGAS Web Application--Developed by Department of State Accounts, Ministry of Finance Planing and Economic Development..

-

கணக்கீட்டு உத்தியோகத்தர்

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்

தலைப்பு 287- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் 11(I) ஆம் பிரிவின் பிரகாரம், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கக் கணக்காய்வறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயங்கள்

தலைப்பு 287 - 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றோடு முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப் பாய்ச்சற் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வானது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது வழிநடத்தலின் கீழ் நடாத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 11(I) ஆம் பிரிவின் பிரகாரம், காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனுப்பி வைக்கப்பட்டுள்ள கணக்காய்வறிக்கை, உரிய காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள, தொடர்புடைய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படைகளுக்கு இணங்க, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதி நிலைமையையும், அன்றோடு முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாட்டையும் அதன் காசுப் பாய்ச்சல்களையும் நிதிக்கூற்றுக்கள் உண்மையானதாகவும் நியாயமானதாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க நான் எனது கணக்காய்வை நடாத்தினேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள், இவ்வறிக்கையின் "நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்" எனும் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளன என நான் நம்புகின்றேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இன் பால் அவதானம் ஈர்க்கப்படுகின்றது. இந்நிதிக்கூற்றுக்கள், அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 ஆகியவற்றிற்கும் 2025 திசெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட 02/2025 ஆம் இலக்க பொதுக் கணக்கீட்டு வழிகாட்டலுக்கும் இணங்க காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கை நாடாளுமன்றம் ஆகியவற்றின் தேவைகளுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, இந்நிதிக்கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்குப் பொருத்தமற்றவையாக இருக்கலாம். எனது அறிக்கை காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கை நாடாளுமன்றம் ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு மாத்திரமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியற்றதாகும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 ஆகியவற்றிற்கும் 2025 திசெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட 02/2025 ஆம் இலக்க பொதுக் கணக்கீட்டு வழிகாட்டல்களுக்கும் இணங்க, அனைத்துப் ஆவண ரீதியான தவறான கூற்றுக்களிலும்நிதி நிலைமையின் உண்மையானதும் நியாயமானதுமான காட்சியைப் பிரதிபலிக்கும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய ஆவண ரீதியான தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பை சாத்தியமாக்குவதற்குத் தேவையான உள்வாரி கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புடையவராவார்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலமுறை நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதைச் சாத்தியமாக்குவதற்காக, திணைக்களம் தனது அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய முறையான புத்தகங்களையும் பதிவுகளையும் பேண வேண்டும்.

தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (c) உப பிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் நிதிப்பாட்டுக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்வாரி கட்டுப்பாட்டு முறைமையொன்று இருப்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும் என்பதுடன், அத்தகைய முறைமைகளின் வினைத்திறனைக் கண்காணிப்பதற்குக் காலமுறை மீளாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கமைய, அத்தகைய முறைமைகள் வினைத்திறனுடன் நடத்தப்படுவதற்குத் தேவையானவாறு ஏதேனும் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய ஆவண ரீதியான தவறான கூற்றுக்கள் அற்றவையாகக் காணப்படுகின்றனவா என்பது குறித்து நியாயமான உறுதியப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதியப்பாடு என்பது ஒரு உயர் மட்ட உறுதியப்பாடாகும், ஆனால் அது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வொன்று, ஆவண ரீதியான தவறான கூற்றொன்று இருக்கும்போது அதனை எப்போதும் கண்டறியும் என்பதற்கான உத்தரவாதமல்ல. தவறான கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படலாம் என்பதுடன், அவை தனித்தனியாக அல்லது ஒட்டுமொத்தமாக, இந்நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்கள் எடுக்கும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடும் என நியாயமாக எதிர்பார்க்கப்படும் பட்சத்தில் ஆவண ரீதியானவையாகக் கருதப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் ஒரு பகுதியாக, கணக்காய்வு முழுவதிலும் நான் தொழில்சார் நீதித்தீர்ப்பைப் பயன்படுத்துவதுடன் தொழில்சார் ஐயுறவுவாதத்தையும் பேணுகின்றேன்.

- மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய, நிதிக்கூற்றுக்களின் ஆவண ரீதியான தவறான கூற்றுக்களின் இடர்களை நான் அடையாளம்கண்டு மதிப்பீடு செய்கின்றேன்; அவ்விடர்களுக்குப் பதிலளிக்கக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயல்படுத்துகின்றேன்; அத்துடன் எனது அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்கின்றேன். மோசடியானது கூட்டுச்சதி, ஆவணப் போலிச்செயல், திட்டமிட்ட விடுபாடுகள், தவறான விளக்கமளிப்புகள் அல்லது உள்வாரி கட்டுப்பாடுகளை மீறிச் செயல்படுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம் என்பதால், தவறு காரணமாக ஏற்படும் ஆவண ரீதியான தவறான கூற்றைக் கண்டறியாமல் விடுவதைக் காட்டிலும், மோசடி

காரணமாக ஏற்படும் ஆவண ரீதியான தவறான கூற்றைக் கண்டறியாமல் விடுவதற்கான இடர் மிக உயர்வானதாகும். எனது அவதானிப்புகள் வருமாறு

- அச்சந்தர்ப்பங்களில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்குப் பொருத்தமான உள்வாரி கட்டுப்பாடு பற்றிய புரிதலை நான் பெற்றுக்கொள்கின்றேன்; எனினும், இது திணைக்களத்தின் உள்வாரி கட்டுப்பாட்டின் வினைத்திறன் குறித்து ஒரு அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டையும், முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் அது சார்ந்த வெளிப்படுத்தல்களின் நியாயத்தன்மையையும் நான் மதிப்பிடுகின்றேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை நான் மதிப்பிடுவதுடன், நிதிக்கூற்றுக்கள் நியாயமான சமர்ப்பிப்பை எய்தும் வகையில் அதன் பின்னணியிலுள்ள கொடுக்கல்வாங்கல்களையும் நிகழ்வுகளையும் பிரதிபலிக்கின்றனவா என்பதையும் மதிப்பிடுகின்றேன்.

மற்றைய விடயங்களுடன், எனது கணக்காய்வின் போது நான் அடையாளம்காணும் உள்வாரி கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக, குறிப்பிடத்தக்க கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் குறித்து நான் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்கின்றேன்.

2 ஏனைய சட்டத் தேவைகள் குறித்த அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ) ஆம் பிரிவிற்கு இணங்க நான் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) மீளாய்விற்குரிய வருடத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முந்தைய வருடத்துடன் இணங்கிப்போகின்றனவாகக் காணப்பட்டன.

(ஆ) முந்தைய வருடத்திற்கான பின்வரும் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3.நிதி மீளாய்வு

3.1 **செலவின முகாமைத்துவம்**

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, முறையான ஆய்வு இன்றி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஒதுக்கீடுகள் மீதமாகியிருந்தன. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் மென்பொருள் மேம்பாடு ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட செலவினங்களுக்கான நிதியொதுக்கீடுகளைச் சரியாக முகாமை செய்து செலவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாக, முறையே 1,700,000 ரூபா மற்றும் 8,907,481 ரூபா அல்லது முறையே 68 சதவீதம் மற்றும் 73 சதவீதம் மீதமாகியிருந்தது.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்	**அவற்றுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள்**
(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை இருபத்துநான்காம் (XXIV) அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள்	i. பதவியை விடுத்துச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் 01 வருடம் தொடக்கம் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட எஞ்சியிருந்த நிலுவைக் கடன்தொகை 189,900 ரூபாவாகும். ii. வேலைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 30,271 ரூபா துயர்துடைப்புக் கடன் நிலுவையானது, 1-3 வருடங்கள் வரையிலான காலப்பகுதியாக அறவிடப்படாதுள்ளது அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை எய்தாமை

i. 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசம்பர் 31 ஆம் திகதி வரை பிம்சவிய வேலைத்திட்டத்திற்காகப் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் 4,382.20 மில்லியன் ரூபாவாகும் அத்துடன் அதன் செலவினம் 2,916.81 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 1999 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இவ்வேலைத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்த விபரங்கள் பொறுப்புவாய்ந்த நிறுவனங்களால் குறித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை..

ii. பிம்சவிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 57 அலுவலகங்களில் அதன் ஆரம்பம் முதல் 2025 திசம்பர் 31 ஆம் திகதி வரை, 12 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காகத் தலைமை அலுவலகத்திற்குப் பெறப்பட்டிருந்த 1,943,657 காணித் துண்டுகளில், பொதுமக்களுக்கு விநியோகிக்க முடிந்த காணி உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 482,139 ஆகும் அத்துடன் 2025 திசம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு பிராந்திய அலுவலகங்களில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படாது எஞ்சியிருந்த சான்றிதழ்களின் எண்ணிக்கை 34,461 ஆகும். பல்வேறு பிரச்சினைகளைக் கொண்ட காணித் துண்டுகள் தொடர்பாக எதிர்காலத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை 443,012 என்பது அவதானிக்கப்பட்டது..

4.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) **ஆவணங்களை பதிவுருத்தல்**

தாபனவிதிக் கோவையின் XXVIII அத்தியாயத்தின் 9.3, 9.4 ஆம் பிரிவுகளுக்கு இணங்க, பொதுவான ஆவணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அந்த ஆவணங்களைத் தேசிய ஆவணக்காப்பகத்திடம் ஒப்படைப்பதற்கோ அல்லது அவற்றைச் சரியான முறையில் பாதுகாப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றபோதிலும், திணைக்களம் அவ்வாறு செய்யாது பல வருடங்களுக்குப் பின்னர் பழுதடைந்த ஆவணங்களைப் பதிவுருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, பழைய ஆவணங்களைப் பதிவுருத்தல் மற்றும் பாதுகாக்கும் பணிகளை 03 கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு முதல் கொள்முதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 2025 திசம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு 04 கட்டங்களுக்காக

ஏறத்தாழ 496,750 பக்கங்கள் பதிவுருத்தப்பட்டு, ஒப்பந்த நிறுவனத்திற்கு 26,428,529.58 ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வாகனத்தைப் பழுதுபார்த்தல்

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே 361 கி.மீ மற்றும் 1423 கி.மீ ஓட்டத்தூரத்தைக் கொண்டிருந்ததும், பழுதடைந்ததுமான KH-5708 இலக்கத்தைக் கொண்ட வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்காக 2024 ஆம் ஆண்டில் 1,104,600 ரூபா தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதனை ஓடும் நிலைக்குக் கொண்டுவர முடியாமல் போயிருந்தது.

(இ) மொறட்டுவை, இரத்மலானை மற்றும் தெஹிவளை ஆகிய 03 பிம் சவிய பிராந்திய அலுவலகங்களை நிறுவுவதற்காக, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்குச் சொந்தமான இரத்மலானையிலுள்ள உணவுக்களஞ்சியத் தொகுதிவளாகக் கட்டடம் ஒன்றிற்காக ஒப்பந்த நிறுவனத்திற்கு 9,963,370 ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் பணிகள் 2023 திசம்பர் 22 ஆம் திகதியளவில் நிறைவடைந்திருந்தன.

08 மாதங்களுக்குப் பின்னரே, மொறட்டுவை பிராந்திய அலுவலகத்தின் அலுவலகப் பணிகள் மாத்திரம் அதில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர், இக்கட்டடத்தில் அலுவலகப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டு, 2025 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியன்று நுகேகொட, தெல்கந்தவிலுள்ள அலுவலகத்திற்கு அது மாற்றப்பட்டிருந்தது. எனவே, அந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமானது ஒரு சிக்கனமற்ற செலவினமாக அமைந்திருந்தது.

பிராந்திய அலுவலகங்களை நிறுவுகின்ற போது, போதிய வசதிகளைக் கொண்ட அரச கட்டடங்களைத் தேடிக்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக, வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 35 கட்டடங்களில் அவை நிறுவப்பட்டிருந்த போதிலும், அக்கட்டடங்களில் போதிய சுகாதார வசதிகள் இல்லாமை, நீர் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம், போதிய காற்றோட்டமற்ற கட்டடங்கள், கடுமையான வெப்பம், பிரதான வீதிக்கு அருகில் அமைந்திருப்பதால் ஏற்படும் கடுமையான தூசி மற்றும் புகை போன்ற அசௌகரியங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இக்கட்டடங்களுக்காக வெளிநபர்களுக்குச் செலுத்தப்பட்ட வாடகைக்கட்டணங்கள் முறையே 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் 21,351,447 ரூபாவும் 23,641,099 ரூபாவும் ஆகும்.

4.3 முகாமைத்துவரீதியான பலவீனங்கள்

(அ) 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாடு தழுவிய ரீதியில் பிம்சவியதிட்டத்தின் கீழ் 83,200 காணித் துண்டுகளுக்கு உரித்துச் சான்றிதழ்களை வழங்குவதற்கு மதிப்பீடுகள்

செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர் திட்டத்தின் இலக்கு 65,408 காணித் துண்டுகள் வரை குறைக்கப்பட்டது. எனினும், உரித்துச் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட காணித் துண்டுகளின் உண்மையான எண்ணிக்கை 18,794 ஆகும். பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டதன் காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்படாதிருந்த காணித் துண்டுகளின் எண்ணிக்கை 19,604 ஆகும். அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் சனவரி முதல் ஆகத்து வரையான காலப்பகுதியில் ஒரு உரித்துச் சான்றிதழையேனும் வழங்க முடியாமல் போயிருந்த பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை 12 ஆகக் காணப்பட்டது.

(ஆ) கொழும்பு, தலைமை அலுவலகக் கடமைகளுக்கு மேலதிகமாக, பிராந்திய அலுவலகங்களில் முழுநேர நிரந்தர சேவையில் அமர்த்தப்பட வேண்டிய பிரதி அல்லது உதவி ஆணையாளர் பதவிகளுக்கு நிரந்தரமாக அதிகாரிகளை நியமிக்கத் தவறியதன் காரணமாக, விசாரணை ஆணையாளர், நிர்வாக ஆணையாளர், பிரதிப் பணிப்பாளர் (காணி) மற்றும் உதவி ஆணையாளர் (காணி) ஆகிய பதவிகளை வகிக்கும் 04 அதிகாரிகள் 02 அல்லது 03 பிராந்திய அலுவலகங்களில் கடமைகளை மூடிமறைப்பதற்காக (மேலதிகப் பொறுப்பாக) அமர்த்தப்பட்டிருந்தனர்..

(இ) பிம்சவியதிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் குறைந்தபட்ச மட்டத்திலேனும் இல்லாத ஒரு சூழ்நிலைக்குள், 2020 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 12 பிராந்திய அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவ்வலுவலகங்களுக்காக 111 பணியாளர்கள் இணைக்கப்பட்டு, மாதாந்தம் 6,645,269 ரூபா சம்பளமும் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்தன. 2025 ஆம் ஆண்டளவில் இந்த 12 அலுவலகங்களினாலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 293 ஆகும் என்பதுடன், ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளின் எண்ணிக்கை 3,971 ஆகக் காணப்பட்டது..

(ஈ) 2023 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தின் நிர்வாகமானது ஒரு திட்டத்திற்கு அமைவாகக் காணி அளவீடுகளை மேற்கொள்வதற்கு நில அளவைத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்காததன் காரணமாக, கெஸ்பேவ பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்குத் தங்களது கடமைகளை நிறைவு செய்வதற்கு அளவீடு செய்யப்பட்ட காணித் துண்டுகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. எனவே, இக்காலப்பகுதியில் சம்பளங்களும் கூலிகளும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவர்களிடமிருந்து சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி; தற்போதைய பதவியணி

(அ) திணைக்களத்தின் 1,783 ஆகக் காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில், தற்போதைய பதவியணி 1,059 ஆக இருந்தது. திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2025.12.31 ஆம் திகதி

வரையிலான காலப்பகுதிக்குள் கடமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக இப்பதவியணி மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிராந்திய அலுவலகங்களின் கடமைகளுக்காகக் காணப்பட்ட மேற்பார்வைஉத்தியோகத்தர்கள்பற்றாக்குறை காரணமாக, 13 உதவிப் பிரதேச செயலாளர்களும் உதவி மாவட்டச் செயலாளர்களும் பதில் பதவிகளுக்காகப் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக, காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 19 உத்தியோகத்தர்கள்பதில் பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நோக்கத்திற்காக 2024 ஆம் ஆண்டில் 2,511,487 ரூபா தொகையும் 2025 ஆம் ஆண்டில் 4,120,378 ரூபா தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

H.N.ரணதுங்க
சிரேஷ்டபிரதி கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம்சார்பாக